**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாரூர்**

**2025 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 12 ம் நாள் வியாழக்கிழமை**

<u>O.S. 45/2022</u>

**வா.சா.2**

**கமலவேணி, க/பெ. வீரமணி**

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u> :**

1. என் கணவரால் புல எண். 56/6 புதிய புல எண்.56/6 ஏ சொத்திற்கு தான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். எவ்வளவு விஸ்தீரணத்திற்கு பரிகாரம் கோரப்பட்டுள்ளது என்றால் 39 சென்ட் பூரா சொத்திற்கும் பரிகாரம் கோரப்பட்டுள்ளது. என் மாமனார் மாரியப்பன் அவர்களால் பிரதிவாதிக்கு மேற்படி புல எண்ணில் எவ்வளவு விஸ்தீரண சொத்து எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது என்றால் என் மாமனார் மேற்படி புல எண்ணில் உள்ள வீடு மட்டும் தான் எழுதிக்கொடுத்தார். ஆனால் பிரதிவாதி மோசடியாக கொல்லை பகுதியையும் சேர்த்து எழுதிக்கொண்டார்.

2. என் கணவரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையில் மேற்படி சொத்தினை வீடு தனியாகவும், கொல்லை தனியாகவும், அதற்கான புல எண்கள் குறிப்பிட்டு விவரம் சொல்லப்பட்டுள்ளதா என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. தாவா புல எண்ணில் உள்ள சொத்துக்களில் இந்த பிரதிவாதி நீங்கலாக என் கணவர் மற்றும் அவருடைய இதர சகோதரர்கள் சேர்ந்து எதுவும் விற்பனை செய்துள்ளார்களா என்றால் தாவா புல எண்ணில் பிரதிவாதி மகேந்திரனுக்குரிய பாகம் நீங்கலாக இதர பாகஸ்தர்கள் அவர்களுடைய பாகத்தை விற்று விட்டார்கள். என்னிடம் காட்டப்படும் கிரய ஆவணமானது எனது கணவர் மற்றும் அவரது சகோதரர் சேகர், சகோதரிகள்

தனம் மற்றும் ரேணுகா ஆகியோர் தாவா புல எண்.56/6 ஏ-ல் உள்ள தங்களுடைய பிரிபடாத பாகமான 4/5 விகிதத்தை மட்டும் சபாயத்துனிசா என்பவருக்கு கிரயம் செய்து கொடுத்தது என்றால் சரிதான். (கடந்த 13.04.2022 தேதியில் சபாயத்துனிசா என்பவருக்கு வீரமணி, சேகர், தனம் மற்றும் ரேணுகா தேவி ஆகியோர்கள் திருவாரூர் சார்பதிவக ஆவண எண்.2036/2022 மூலம் **கிரயம் செய்து கொடுத்தற்கான கிரய ஆவணம் பி.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது) பி.சா.ஆ.1-ல் புல எண்.56/6 ஏ-விற்கான விஸ்தீரணம் என்பது பூரா ஹெக்.0.08.00 ஏர்ஸ் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. வழக்குரையில் தாவா புல எண்.56/6 நஞ்சை பூரா ஹெக். 0.16.0 ஏர்ஸில் புகல் ஹெக். 0.08.0 ஏர்ஸ் சொத்திற்கு தான் பரிகாரம் கோரப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி புல எண்ணில் அமைந்துள்ளதாக கூறப்பட்டுள்ள வீட்டின் நான்கெல்லை விவரம் வழக்குரையில் குறிப்பிடப்படவில்லை என்றால் அதுக்குறித்து தெரியவில்லை. பி.சா.ஆ.1-ல் பக்கம் 7-ல் சொத்து விவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள கிரய சொத்திற்கான நான்கெல்லை என்பது புல எண்.56/6 ஏ-விற்கான முழு நான்கெல்லை என்றால் சரிதான்.

4. என் மாமியார் வள்ளியம்மை எங்கு வசித்து வந்தார் என்றால் நான் 1999-ல் திருமணமாகி வந்ததிலிருந்து என் மாமியார் கொடிக்கால்பாளையம் விஸ்வாமித்திரபுரம் என்ற ஊரில் தான் வசித்து வந்தார். அவர் இறப்பு வரை அங்கு தான் வசித்து வந்தார். என் மாமியார் கூத்தாநல்லூர் வட்டம், அத்திச்சோழமங்கலம் கிராமத்தில் வசித்து வந்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி கிராமத்தில்

அவருக்கு உறவினர்கள் உள்ளார்களா என்றால் தெரியாது. பி.சா.ஆ.1 -ல் கண்டுள்ள 09.04.2022 தேதியில் கூத்தாநல்லூர் வட்டாட்சியரால் வழங்கப்பட்டுள்ள சான்றில் என் மாமியார் வள்ளியம்மை அத்திச்சோழமங்கலம் கிருஷ்ணாபுரம் என்ற முகவரியில் வசித்து வந்ததாத்தான் குறிப்பிபட்டுள்ளது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது.

5. தாவா சொத்தினை என்னுடைய கணவர் மற்றும் இதர சகோதர சகோதரிகள் ஒப்புதலோடு என் மாமனார் இந்த பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளதை மறைத்து பி.சா.ஆ.1 த்திற்கான மூல ஆவணம் தொலைந்து விட்டதாக பொய்யான சான்று பெற்று பி.சா.ஆ.1 ஆவணம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த பிரதிவாதி நீங்கலான என் கணவர் மற்றும் அவரது சகோதர சகோதரிகள் தாவா புல எண்ணில் அவரவருக்குரிய பாக விகிதத்தை விற்பனை செய்து விட்டதால் எஞ்சியுள்ள பாக விகிதத்தை என் மாமனார் இந்த பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் செய்து கொடுத்துவிட்டார் என்பதால் இந்த வழக்கில் நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைத்தக்கதல்ல என்றால் சரியல்ல. என் கணவரால் இந்த பிரதிவாதிக்கு எப்போது சட்ட அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றால் 2022-ல் அனுப்பப்பட்டது. பி.சா.ஆ.1 ஆவணம் ஏற்பட்ட பிறகு தான் மேற்படி சட்ட அறிவிப்பு வா.சா.ஆ.8 அனுப்பப்பட்டது என்றால் சரிதான்.

6. மேற்படி சட்ட அறிவிப்பில் பி.சா.ஆ.1 மூலம் எங்களுடைய பாக விகிதத்தை விற்பனை செய்து விட்டதையும், எஞ்சிய பாக விகிதத்தை மோசடியாக பிரதிவாதி என் மாமனார் மூலம் செட்டில்மெண்ட் செய்து கொண்டது குறித்து சொல்லப்பட்டுள்ளதா என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. மேற்படி வா.சா.ஆ.8 ற்கு இந்த பிரதிவாதியால்

பதில் அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.8 அறிவிப்பு அனுப்பப்பட்டபோது இதர பாகஸ்தர்களுக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டதா என்றால் என் கணவருக்கு தான் தெரியும். மேற்படி விவரங்கள் அனைத்து எனக்கு நன்கு தெரியும் என்றாலும் வேண்டுமென்றே பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

7. தாவா சொத்தில் இதர பாகஸ்தர்களுக்கு உரிமையுள்ளதாக கூறியுள்ள நிலையில் அவர்களை சேர்க்காத காரணத்தினாலும், பாகம் கோரி பரிகாரம் கோராத காரணத்தினாலும் நிலைநிற்கத்தல்ல என்றால் சரியல்ல. என் மாமனார் பிரதிவாதிக்கு ஏற்படுத்தியது சட்டப்படியானது என்றாலும், நல்ல எண்ணத்தின் பால் ஏற்பட்டது என்றாலும் சரியல்ல. என் மாமனார் இறந்துவிட்டதை சாதகமாக கொண்டு பொய் சங்கதிகள் கூறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கு வழக்குமூலம் கிடையாது என்றாலும் நான் கோரியுள்ள பரிகாரம் கிடைக்ககூடியதல்ல என்றாலும், வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல.

//மேற்படியார் தரப்பில் இன்றைய விசாரணையின்போது **பி.சா.ஆ.1** ஆவணம் குறியீடு செய்யப்பட்டது.//

MOHAMED BASIL S

Digitally signed by MOHAMED BASIL S
Date: 2025.06.12 19:41:08 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருவாரூர்.